## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 284/2017

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.10.2023 | தந்தை/கணவர் பெயர்: | கணபதி |
| பெயர்: | கண்ணன்<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நாங்கூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 65/2023 |
| தொழில்: | | | |

**<u>குறுக்கு விசாரணை : 10.10.2023</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

3-ம் வாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறந்து எத்தனை ஆண்டுகள் ஆகும் என்றால் சுமார் 3 ஆண்டுகள் ஆகும். நானும், 2-ம் வாதியும் தான் வழக்கை நடத்தி வருகிறோம். 3-ம் வாதிக்கு வாரிசுகள் உண்டு என்றும் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3-ம் வாதியின் மனைவி பெயர் கலைசெல்வி. மகன்கள் பெயர் துரை மற்றும் மணிகண்டன் ஆகும். மகள் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி 3 நபர்களுக்கும் தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் குடும்பத்தாரின் பூர்வீகம் நாங்கூர் கிராமம் என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆனால் எப்போது இறந்தார் என்று தெரியாது. பிரதிவாதி

குடும்பத்தாருக்கு நாங்கூர் கிராமத்தில் பட்டா நிலம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பிறகு பிரதிவாதி தான் நஞ்சை நிலங்களை சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொந்தமான பெட்ரோல் பங்கு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து புருசோத்தமன் பெருமாள் கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். ஆனால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்திற்கான ஆர்.டி.ஆர் பதிவு யார் பெயரிலும் இல்லை என்றால் எனது தகப்பனார் பெயரில் பதிவாகியுள்ளது. அந்த ஆர்.டி.ஆர் பதிவேட்டை தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆலோசனை செய்து தான் சொல்ல இயலும். எங்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலங்கள் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3-ல் தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிக்க முயற்சிப்பதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3-ல் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் சரியானது என்றால் சரிதான். ஆனால் அசல் வழக்கு 3 புல எண்களுக்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை மட்டும் இடையூறு செய்ததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து நாங்கள் அனுபவித்து வருவதற்கான வருவாய் துறை ஆவணங்களோ, காப்பீட்டு சம்பந்தமான ஆவணங்களோ இழப்பீடு சம்பந்தமான ஆவணங்களோ எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் எவ்வித ஆவணமும் இல்லாததால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அனைத்து ஆவணங்களையும் எனது வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளேன். வா.சா.ஆ.1 வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 27.07.2005-ம் தேதிய நில அனுபோக சாகுபடி பாத்திய உரிமை பத்திரம் மூலம் ரூ.50,000/-ஐ பெற்று கொண்டு பிரதிவாதியிடம் சுவாதீனம் ஒப்படைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பெயரில் குத்தகை உரிமை கோயிலாரிடம் மாற்றி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தற்சமயம் மறுத்து வருகிறோம் என்றால்

சரியல்ல. தாவா சொத்திற்கான குத்தகை உரிமை எங்கள் பெயரில் பதிவாகியுள்ளது என்றும் ஆனால் சுவாதீனம் பிரதிவாதியின் வசம் உள்ளது என்றும் எங்கள் பெயரில் ஆவணம் உள்ளதால் வா.சா.ஆ.1. அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் பணம் பெற்று தான் தாவா சொத்திற்கான குத்தகை எங்கள் பெயரில் செலுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான குத்தகையை இதுநாள்வரையில் நாங்கள் செலுத்தி வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல. எனது 2-வது மகனின் முத்துகுமார் ஆகும்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.